## டிசம்பர் - 23

**"ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது? ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்."**

**- நீதி 15 : 22; 25 : 11.**

கர்த்தரிடத்திற்கு வழியை உங்களிடத்தில் விசாரிக்கிறவர்களிடத்திலும், கேட்கிறதற்குரிய காதுகளையுடையவர்களோடும், நீங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, மனிதருடைய ஜீவியத்தில் பெரிய ஆபத்தான நிலைமைகளும், மிக முக்கியமான சந்தர்ப்பங்களும் இருக்கின்றன என்பதையும், அச்சமயத்தில் சொல்லுகிற ஒரு வார்த்தை, மற்ற சமயத்தில் ஒரு வார்த்தை வித்தியாசமான சூழ்நிலைகளில் சொல்லுகிற நூறு அல்லது ஆயிரம் வார்த்தைகளைவிட மிகவும் மதிப்பு மிக்கதாய் இருக்கும் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். நமக்கு ஏற்ற சமயமோ, அல்லது தவறான சமயமோ, எதுவாகிலும் சரி கர்த்தருடைய ஊழியத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். சகோதரருக்காக நம்முடைய ஜீவனை கொடுக்க சந்தோஷமாகத் தயாராக இருக்க வேண்டும் இருந்தாலும் நமக்கு ஏற்காத சமயத்தையும், மற்றவர்களுக்கு ஏற்காத சமயத்தையும் வித்தியாசப்படுத்தக் கூடியவர்களாயிருந்து அது நமக்கு அனுகூலமில்லாத சமயமாக இருந்து, மற்றவர்களுக்கு அனுகூலமான சமயமாக இருந்தால் எந்த நேரத்திலும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய இஷ்டமுள்ளவர்களாயிருக்க வேண்டும். நமக்கு எவ்வளவு வசதியான சமயமாக இருந்தாலும், மற்றவர்களுக்கு அனுகூலமில்லாத சமயத்தில், அழைக்கப்படாமல், சுவிசேஷத்தைக் கொண்டு செல்லக் கூடாது.

- Z ’02, 381, 382 (R 3122).

மௌனமாக இருக்கவும் சமயமுண்டு, பேசவும் சமயமுண்டு, சொல்ல வேண்டிய விஷயங்களுமுண்டு, சொல்லாமல் விட்டுவிட வேண்டிய விஷயங்களுமுண்டு. மௌனமாக இருக்க வேண்டிய சமயத்தில் பேசுகிறவனும், சொல்லாமல் விட்டுவிட வேண்டியவற்றை சொல்லுகிறவனும் சொல்லவேண்டியவற்றை சொல்லாமல் வைத்துக் கொள்ளுகிறவனும், புத்தியில்லாதவனும் தீங்கிழைக்கிறவனுமாயிருக்கிறான். ஆனால், மௌனமாகயிருப்பது தான் ஒழுங்குமுறை என்றிருக்கும்பொழுது மௌனமாயிருப்பவனும், தகுதியற்றதும், தீங்கிழைக்கிறதுமானவைகளை வெளியிடாதிருக்கிறவனும் சமயத்துக்கும் இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஆளுக்கும், தேவைப்படுகிற விஷயத்தை சரியான ஆவியிலும், விதத்திலும் தெரிவிக்கிறவன், விவேகமுள்ளவனும் உதவுகிறவனுமாயிருக்கிறான். சரியான ஆவியிலும், விதத்திலும், சரியான சமயத்திலும், சந்தர்ப்பத்திலும் இடத்திலும், தகுதியான ஆளுக்கு ஏற்றகாரியத்தைச் சொல்லுவதற்குரிய, திறமையை அரிதாக அடைந்ததும், அரிய மதிப்புள்ளதும், நன்மை பயக்கும் தன்மையுள்ளதுமான குணசீலமாகும். நாம் பேசப்போகிற விஷயத்தை தேர்ந்தெடுப்பதற்கும், எந்த ஆவியிலும், விதத்திலும் நாம் பேசவேண்டுமென்பதையும், சமயங்கள் சந்தர்ப்பங்கள், பேசப்போகிற இடம், யாருக்குப் பேசப்போகிறோம் என்கிற இவ்விஷயங்களிலெல்லாம் நாம் மிகவும் ஊக்கமாய்க் கவனம் செலுத்துவோமாக. அப்பொழுது நம்முடைய வார்த்தைகள் அதிகதிகமாக நன்மைபயக்கக் கூடியதாயுமிருக்கும். ஏனென்றால், அவைகள் உற்றகாலத்தில் கொடுக்கப்பட்டவை.

**- P ’26, 173.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

சங் 37:30; 39:1; 119:13,46,72; 141:3; நீதி 12:18-20; 15:1,2,4,7; 16:21,23,24; 31:26; பிர 12:9-11; எபே 4:25,29; கொலோ 4:6; 1பேது 3:15,16; வெளி 14:5.

**கோபுர வாசிப்பு :** Z ’14, 245 (R 5517).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் என் நாவை நான் எப்படி உபயோகித்தேன்? அதன் பலன்கள் எவை?